### மாதவரம்–சிறுசேரிக்கு

# சேத்துப்பட்டு ஏரி, அடையாறு ஆற்றுக்கு அடியில் மெட்ரோ ரெயில் பாதை

## 70 அடி ஆழத்தில் அமைக்கப்படுகிறது

சென்னை, ஏப். 3–

சென்னை மாநகர போக்குவரத்து நெருக்கடியை குறைப்பதற்காகவும், விரைவு பயணத்துக்காகவும் மெட்ரோ ரெயில் திட்டம் உருவாக்கப்பட்டது. முதல் கட்டமாக கோயம்பேடு – ஆலந்தூர், சின்னமலை – விமான நிலையம் வரை உயர்மட்ட பாதை யிலும், திருமங்கலம் – வண்ணாரப் பேட்டை, சைதாப்பேட்டை – சென்ட்ரல் வரை சுரங்கப் பாதையிலும் மெட்ரோ ரெயில் சேவை நடந்து வரு கிறது.

பயணிகள், பொது மக்கள் இடையே மெட்ரோ ரெயில் திட்டத்துக்கு வரவேற்பு ஏற்பட்டதையொட்டி 2–வது கட்டமாக மாதவரம் – சிறுசேரிக்கு ரூ. 85 ஆயிரம் கோடி செலவில் மெட்ரோ ரெயில் திட்டம் உருவாக்கப் பட்டது. 118 கிலோ மீட்டர் தூரத்துக்கு இந்த வழித்தட பாதை அமைக்கப்படுகிறது.

### சேத்துப்பட்டு ஏரி– அடையாற்றுக்குஅடியில்

மாதவரம் – சிறுசேரி வழித்தட பாதை சேத்துப் பட்டு ஏரி, அடையாற்றுக்கு அடியில் 70 அடி ஆழத்தில் இரட்டை வழித்தட சுரங்கப் பாதையாக உருவாக்கப் படுகிறது.

இதற்காக அடையாறு ஆற்றங்கரையோரம் மண் பரிசோதனை ஆய்வு பணி கள் நடந்து வருகிறது. அதைத் தொடர்ந்து சுரங்கம் அமைக்கும் பணிகள் இந்த ஆண்டு இறுதிக்குள் அல்லது வருகிற ஜனவரி மாதத்துக் குள் தொடங்கப்படுகிறது. இதற்கான டெண்டர் விடும் பணி ஜுன் மாதத்துக்குள் நடைபெறும்.

சேத்துப்பட்டு ஏரிக்கு அடி யிலும் 70 அடி ஆழத்தில் மெட்ரோ ரெயில் வழித்தட பாதை அமைப்பதற்கான மண் ஆய்வு பணிகளும் தற்போது நடந்து வருகிறது. முதல்கட்ட மெட்ரோ ரெயில் திட்டத்தில் சென்ட்ரல் அருகே கூவம் ஆற்றுக்கு அடியில் 70 அடி ஆழத்தில் மெட்ரோ ரெயில் வழித்தட பாதை அமைக்கப்பட்டு மெட்ரோ ரெயில் வெற்றிகர மாக செயல்பட்டு வருகிறது.

தற்போது 2–வது கட்ட மாக சேத்துப்பட்டு ஏரி, அடையாற்றுக்கு அடியில் 70 அடி ஆழத்தில் மெட்ரோ ரெயில் வழித்தட பாதை உருவாக்கப்பட உள்ளது.

இது குறித்து மெட்ரோ ரெயில் அதிகாரி ஒருவர் கூறியதாவது:–

### வடசென்னை – தென் சென்னை

2–வது கட்டமாக வட சென்னை – தென் சென்னை பகுதிகளை இணைக்கும் விதமாக மெட்ரோ ரெயில் வழித்தட பாதை திட்டம் உருவாக்கப்படுகிறது.

இதற்காக சேத்துப்பட்டு ஏரி, அடையாறு ஆற்றுக்கு அடியில் மெட்ரோ ரெயில் செல்ல சுரங்கப்பாதை 70 அடி ஆழத்தில் அமைக்கப் படுகிறது.

இதற்கான மண் பரி சோதனை ஆய்வு பணிகள் தற்போது நடந்து வருகிறது. 2025–ம் ஆண்டுக்குள் இந்த இரட்டை வழித்தட சுரங்கப் பாதை பணிகள் நிறைவேறும். முதல்கட்ட மெட்ரோ ரெயில் திட்டத்தில் கூவம் ஆற்றுக்கு அடியில் மெட்ரோ ரெயில் வழித்தட பாதை உருவாக்கப்பட்டு மெட்ரோ ரெயில் சேவை நடந்து வருகிறது.

தற்போது 2–வது கட்ட மெட்ரோ ரெயில் திட்டத் தில் சேத்துப்பட்டு ஏரி, அடை யாறு ஆற்றுக்கு அடியில் 70 அடி ஆழத்தில் மெட்ரோ ரெயில் இரட்டை வழித்தட பாதையை மெட்ரோ ரெயில் நிறுவனம் அமைக்கிறது.

இவ்வாறு அவர் கூறி னார்.